செய்தி வெளியீட்டு எண்.347 நாள்: 4.7.2009

## செய்தி வெளியீடு

### நகராட்சி மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுத் தொகை, பாராட்டு சான்றிதழ் துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

நகராட்சி மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற 53 மாணவ, மாணவிகளுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் பரிசுகளை வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

நகராட்சி மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரை பாராட்டி, ஊக்குவிக்கும் வகையில் 2007–08 ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் நகராட்சி மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வுகளில் முதலாவதாக வரும் 25 மாணவ, மாணவிகளுக்கு பரிசுத் தொகையாக ரூபாய் 10 ஆயிரமும், பாராட்டு பத்திரமும் வழங்கவும், மேலும் அவர்களுள் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு பட்டப் படிப்பு மேற்கொள்ள உதவித் தொகையும் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

பரிசுத் தொகையும் மற்றும் கல்வி உதவித் தொகையும் வழங்கிட ஏதுவாக, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் கல்வி நிதியிலிருந்து ரூபாய் 2.53 கோடியும், அரசு மானியமாக ரூபாய் 2 கோடியும் பங்களிப்பு செய்யப்பட்டு, “நகராட்சி மற்றும் மாநகராட்சி பள்ளி மாணவர் கல்வி உதவி நிதி” என்கிற பெயரில் பொதுநிதி ஒன்று உருவாக்கப்பட்டு அந்நிதி அரசு நிதி நிறுவனமான டுபிட்கோ (TUFIDCO) யிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிதியின் மூலம் கிடைக்கின்ற வட்டியினை பயன்படுத்தி மாணவ, மாணவிகளுக்கான பரிசுத் தொகையும், கல்வி உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் 2007–08ஆம் ஆண்டில் முதன்

**முதலில் 10ஆம் வகுப்பு தேர்வில் முதல் இடம் பெற்ற 25 மாணவ, மாணவியர்களுக்கும், 12ஆம் வகுப்பு தேர்வில் முதல் இடம் பெற்ற 25 மாணவ, மாணவியர்களுக்கும், பரிசுத் தொகையும், பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.**

**2008–09ஆம் ஆண்டில் நகராட்சி மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் கல்வி பயின்று 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வுகளில் முதலாவதாக வந்த 25 மாணவ, மாணவியர்களின் தர வரிசைப் பட்டியல் கல்வித்துறையிருந்து பெறப்பட்டது. முதலாவதாக வந்த ஒவ்வொரு மாணவர்களுக்கும் ரூபாய் 10 ஆயிரம் பரிசுத் தொகையும், பாராட்டு சான்றிதழ்களையும் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (4.7.2009) தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.**

**இந்நிகழ்வின் போது, சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியன், கோவை மாநகராட்சி மேயர் திரு. ஆர். வெங்கடாசலம், மதுரை மாநகராட்சி மேயர் திருமதி. தேன்மொழி கோபிநாதன், திருப்பூர் மாநகராட்சி மேயர் திரு. செல்வராஜ், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் டாக்டர் நிரஞ்சன்மார்டி, நகராட்சி நிர்வாக இயக்குநர் முனைவர் ப. செந்தில்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.**

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை – 9.